IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
C.C. No. 550/2023

**PW - 4 Cross**

Name: திரு.மணிகண்டபிரபு

S/o : சீதாராமன்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of May 2025.

Signature of Witness

19.05.2025

எதிரி ஆஜர்.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திருவண்ணாமலையில் குடியிருந்து வருகிறேன் . நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். நான் மடவார் வளாகத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டிலும் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டிலும் ஆட்டோ ஓட்டினேன் . பொதுவாக ஆட்டோ ஸ்டாண்டானது ஒரு இடத்தில்தான் இருக்கும் என்றால் நான் இரண்டு ஆட்டோ ஸ்டாண்டிலுமே ஆட்டோ ஓட்டுகிறேன் . நான் அதிகநேரம் திருவண்ணாமலையிலுள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுவேன் . அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அ.சா.1 ன் மகளான அ.சா.2 ஐ நான் தான் தினந்தோறும் ஆட்டோவில் பள்ளிக்கு அழைத்துச் செல்வேன் என்றால் சரிதான் . திருவண்ணாமலையிலிருந்து மடவார் வளாகத்திற்கும் 4 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும் . நான் திருவண்ணாமலையிலுள்ள ஆட்டோ ஸ்டாண்டிற்கு தினமும் காலை 7 மணிக்கு வருவேன். காலை 7 மணிமுதல் இரவு 8 மணி வரை அந்த ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுவேன். அ.சா.2 ன் தங்க செயினானது பறித்து செல்லப்பட்டதாக என்னிடம் அன்றே தகவல் கூறினார்களா என்றால் இல்லை . அதுபற்றி மறுநாள் காலை 7 மணியளவில் திருப்பாற்கடலில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனர் . போலீசார்

விசாரணை செய்தபோது என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரிதான் . ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் மறுநாள் போலீசார் என்னை விசாரிக்கவில்லை . பொதுவாக நான் காலை 7 மணியளவில் திருவண்ணாமலையில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருப்பதால் அங்கிருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலுள்ள திருப்பாற்கடலில் போலீசார் விசாரணையின்போது கையெழுத்திட்டிருக்க முடியாது என்றால் சரியல்ல . அ.சா.1 க்கு நான் வழக்கமான ஆட்டோ ஓட்டுநர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல . அ.சா.1 சம்பவம் பற்றி என்னிடம் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை போலீசார் சொல்லித்தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் . சம்பவத்தன்று மாலையே அ .சா.1 யிடம் நானும் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன் என்றாலும் அங்கு வைத்தே எதிரியை அடையாளம் தெரிந்து கொண்டேன் என்றாலும் சரியல்ல . நான் திருப்பாற்கடலில் வைத்து எதிரியை பார்த்ததாக கூறுவது அ .சா.1 க்காக பார்த்ததாக கூறுவது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . என்னுடன் இருந்ததாக கூறப்படும் சிவக்குமார் (அ.சா.3) மடவார் வளாகத்தில் ஆட்டோ ஓட்டுகிறார் . அவர் மடவார் வளாகம் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறார் . அ.சா.3 க்கும் அ.சா.1 கீதாலட்சுமியை தெரியும் என்றால் சரிதான் . நான் வேலைக்கு செல்லாத நாட்களில் பொதுவாக நான் செல்லும் சவாரிகளுக்கு அ .சா.3 செல்வார் என்றால் சரிதான் . நான் திருவண்ணாமலை ஸ்டாண்டிலும் அ .சா.3 மடவார் வளாகம் ஸ்டாண்டிலும் ஆட்டோ ஓட்டுவதால் நாங்கள் அடிக்கடி சந்திப்பதற்கு அதிக வாய்ப்பு இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் அத்தாச்சி போன்ற ஆவணங்களில் திருப்பாற்கடலில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரியை நான் பார்த்ததே இல்லை என்றாலும் சரியல்ல . போலீசார் என்னிடம் எதிரியை அடையாளம் காட்டியதால் தான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல . நான் தற்போது போலீசார் கூறியதால் தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2
திருவில்லிப்புத்தூர்.